DOC - 2

# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

8075868

C 04/AC/2022

1. District மாவட்டம்: Thiruvallur PS: காவல்நிலையம்: Vigilance & Anti-Corruption Year: ஆண்டு: 2022 FIR No.: மு.த.அ. எண் Date: நாள்: 21.06.2022 14.00hs

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act, 1988 (as amended in 2018) Sections பிரிவுகள்:
   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்: 7
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 10.06.2022 Date to : நாள் வரை at about 12.00hs at Pallipattu Taluk office.
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 17.06.22 Time to : நேரம் வரை at about 11.30hs at VAO office Krishnamarajakuppam
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 21.06.2022 Time : நேரம் at 12.30hs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 21.06.2022 Time : நேரம் at 12.30hs & 14.00hs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் West. About 60 km
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி O/o the Village Administrative officer Krishnamarajakuppam village, Pallipattu Taluk. Thiruvallur District.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

Seen [signature] 22/6/22

Seen [signature] 22/6/2022

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. K. Viswanathan. (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Tr. E. C. Krishnan
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு age 38/22 (d) Nationality : நாட்டினம் INDIAN. (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் Tamil Teacher. Private School. Nagari AP. State. (g) Address : முகவரி NO. 2/525. Pillaiyar Koil Street. Koraikuppam village Pallipattu Tk Thiruvallur. District.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   Tr. Mani, Village Administrative officer. Krishnamarajakuppam. village. Pallipattu Tk. Thiruvallur District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Demand of Rs. 7000/- as bribe.

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம் (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

separate sheet attached.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed G. ANNADURAI Rank Inspector to take up the Investigation / Refused Investigation / transferred to PS V&AC / Kpm i/c Tvlr. on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .......................... பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .......................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையிட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 21/06/2022

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையிட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 21/6/2022
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
22.06.2022 at 09.10 hrs.

Name: பெயர் G. ANNADURAI
Rank: நிலை Inspector of police
Kanchipuram V&AC
i/c Thiruvallur V&AC.

**(Contents of the F.I.R. in Thiruvallur V & AC, Cr.No.04/AC/2022/TVL, U/s 7 of the Prevention of Corruption Act, 1988 (as amended in 2018) continues . . .)**

**பணிந்து அனுப்புகிறது**

இன்று 21.06.2022-ம் தேதி மதியம் சுமார் 12.30 மணியளவில் திருவள்ளூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் கூடுதல் பொறுப்பு காவல் ஆய்வாளராகிய நான் ஆஜரில் இருக்கும்போது, திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு வட்டம், கோனுகுப்பம் கிராமத்தைச்சேர்ந்த திரு.K.விஸ்வநாதன், வயது 38, த/பெ.E.C.கிருஷ்ணன் என்பவர் என்னிடம் கொடுத்த புகாரின் விவரம் வருமாறு: அனுப்புநர், K.விஸ்வநாதன், வயது 38, Cell No.8015801577, த/பெ. E.C.கிருஷ்ணன், எண்.2/525, பிள்ளையார் கோயில் தெரு, கோனுகுப்பம் கிராமம், பள்ளிப்பட்டு வட்டம், திருவள்ளூர் மாவட்டம். பெறுநர், உயர்திருகாவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவள்ளூர் மாவட்டம். ஐயா, நான் மேற்கண்ட முகவரியில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் M.A., B.Ed., படித்துவிட்டு ஆந்திர மாநிலம் நகரியில் உள்ள சரஸ்வதி வித்யாமந்திர் என்ற தனியார் பள்ளியில் தமிழ் ஆசிரியராக பணிபுரிந்துவருகிறேன். எனது தந்தை திரு.E.C.கிருஷ்ணன், அவர்கள் கிருஷ்ணமாநாயுடுகுப்பம் கிராம கணக்கில் அடங்கிய சொத்துக்களை பிரித்து எனது பெயரில் தான செட்டில்மெண்ட் ஆவணம் செய்து வைத்தார். அதன்படி கிருஷ்ணமாநாயுடுகுப்பம் கிராமத்தில் பட்டா எண்.113-ல், சர்வே எண்.2/5A, பட்டா எண்.39-ல், சர்வே எண்.2/6, பட்டா எண்.441-ல், சர்வே எண்.2/9, பட்டா எண்.4056-ல், சர்வே எண்.2/13G, 2/2B மற்றும் பட்டா எண்.4057-ல், சர்வே எண். 215/17B-ல், கூட்டுப் பட்டா எண்.684-ல் சர்வே எண்.213/6 அடங்கிய சுமார் 87.5 செண்ட் விவசாய நிலம், மின் இணைப்புடன் கூடிய கிணறு, மின்மோட்டார் ஆகியவைகளும், மேற்படி கிராம கணக்கில் அடங்கிய பட்டா எண்.81-ல் கிராம நத்தம் சர்வே எண்.236/20-ல் உள்ள மொத்தம் 2227 சதுர.அடி கொண்ட வீட்டு மனை மற்றும் அதில் உள்ள 440 சதுர.அடி பரப்பளவில் கட்டப்பட்ட வீட்டினையும் சேர்த்து என் பெயருக்கு எனது தந்தை தான செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிவைத்து. அந்த ஆவணம் ஆர்.கே.பேட்டை சார்பதிவாளர் அலுவலகத்தில் கடந்த 20.05.2022-ந்தேதி ஆவண எண்.1665/2022-ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி சொத்துக்களின் பட்டாக்களை எனது தந்தையின் பெயரிலிருந்து. எனது பெயருக்கு பட்டா பெயர் மாற்றம் செய்யவேண்டி, நான் கடந்த 07.06.2022-ந்தேதி இ-சேவை மையத்தின் மூலமாக, பட்டா பெயர் மாற்றுதல் கோரி மனு எண்கள்.2022/0103/01/273617 மற்றும் 2022/0105/01/418637-ன் படி மனு செய்திருந்தேன். அதன்பின்னர் பள்ளிப்பட்டு வட்டாட்சியர் அலுவலகத்தில் ஜமாபந்தி

**(FIR contents, continues to next page.....)**

**(Contents of the F.I.R. in Thiruvallur V&AC, Cr.No.04/AC/2022/TVL, U/s 7 of Prevention of Corruption Act 1988 (as Amendment in 2018). Continuous.....)**

நடப்பதாக தெரியவந்ததால், நான் கடந்த 10.06.2022-ந்தேதி சுமார் 12.00 மணியளவில் பள்ளிபட்டு வட்டாட்சியர் அலுவலகம் சென்று ஜமாபந்தி நடத்திய அலுவலரிடம், எனது தந்தை, எனது பெயருக்கு தான செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் கொடுத்த சொத்துக்களுக்கு, எனது தந்தை பெயரில் இருந்து எனது பெயருக்கு பட்டா பெயர் மாற்றம் செய்ய நேரடியாக மனு கொடுத்துவிட்டு பள்ளிபட்டு தாலுக்கா அலுவலகத்தை விட்டு வெளியில் வந்தபோது, அங்கு பணியில் இருந்த கிருஉஷ்ணமராஜகுப்பம் கிராம நிர்வாக அலுவலர் திரு.மணி என்பவர் என்னை அழைத்து, தங்கள் மனுசம்மந்தமாக நான் தான் நடவடிக்கை எடுத்து, மனுவில் குறிப்பிட்டுள்ள சொத்துக்களுக்கு, தங்களின் தந்தையின் பெயரிலிருந்து தங்கள் பெயருக்கு பட்டா பெயர் மாற்றம் செய்ய பரிந்துரை செய்து, பள்ளிபட்டு வட்டாட்சியர் அலுவலகத்திற்கு அனுப்புவேன் எனவும், பொதுவாக இவ்வாறான பட்டா பெயர் மாற்றம் சம்மந்தமான மனுவின் மீது நடவடிக்கை எடுக்க மனுதாரரிடமிருந்து ரூ.20,000/- வாங்குவேன் என்றும், தாங்கள் ஜமாபந்தியில் மனு கொடுத்ததாலும், ஏற்கனவே இ-சேவை மையம் மூலம் பட்டாமாறுதல் கோரிமனு செய்திருந்ததாலும், நீங்கள் ரூ.10,000/- மட்டும் கொடுங்கள், நான் தங்களின் பெயருக்கு பட்டா பெயர் மாற்றம் செய்வது சம்மந்தமான தங்களின் மனுவின் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்வேன் என்று தெரிவித்து அனுப்பிவிட்டார். அதன்பின்னர் நான் கடந்த 17.06.2022-ந்தேதி காலை சுமார் 11.30 மணிக்கு மீண்டும் கிருஉஷ்ணமராஜகுப்பம் VAO அலுவலகம் சென்று அங்கு பணியிலிருந்த VAO திரு.மணி அவர்களை சந்தித்து, எனது மனு சம்மந்தமாக கேட்டபோது, VAO திரு.மணி அவர்கள், நான் கேட்ட பணம் ரூ.10,000/- கொண்டு வந்துள்ளாயா என்று கேட்டார், அதற்கு நான் என்னுடைய குடும்ப சூழ்நிலை மற்றும் இயலாமையை எடுத்து கூறியபோது VAOதிரு.மணி அவர்கள், தான் ஏற்கனவே கேட்டிருந்த பணத்தில், ரூ.3,000/- குறைத்துக்கொண்டு ரூ.7,000/-ஐ வரும் 22.06.2022-ந்தேதி தனது அலுவலகத்தில் கொண்டு வந்து கொடுக்குமாறும், அவ்வாறு கொடுத்தால் தான் என் மனுவின் மீது உரிய நடவடிக்கை எடுத்து எனது தந்தை பெயரிலிருந்து, எனது பெயருக்கு பட்டா பெயர் மாற்றம் செய்ய பரிந்துரை செய்து பள்ளிபட்டு வட்டாட்சியர் அலுவலகத்திற்கு அனுப்புவேன் என்றும் கராராக கூறி அனுப்பிவிட்டார். எனவே, எனது தந்தை, எனது பெயருக்கு செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் வழங்கிய சொத்துக்களுக்கு எனது தந்தையின் பெயரிலிருந்து எனது பெயருக்கு பட்டா பெயர் மாற்றம் செய்ய நான் கொடுத்திருந்த மனுவின் மீது

**(FIR contents, continues to next page.....)**

**(Contents of the F.I.R. in Thiruvallur V&AC, Cr.No.04/AC/2022/TVL, U/s 7 of Prevention of Corruption Act 1988 (as Amendment in 2018). Continuous.....)**

நடவடிக்கை எடுத்து, பள்ளிபட்டு வட்டாட்சியர் அலுவலகத்திற்கு பரிந்துரை செய்து அனுப்ப கிருஷ்ணமராஜகுப்பம் VAO திரு.மணி அவர்கள் என்னிடம் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.7,000-த்தை கொடுக்க எனக்கு விருப்பமில்லாததால், என்னிடம் லஞ்சப்பணம் கேட்ட கிருஷ்ணமராஜகுப்பம் VAO திரு.மணி என்பவர் மீது சட்டப்படி, உரிய நடவடிக்கை எடுக்க. அவர் கேட்ட லஞ்சப்பணம் ரூ.7,000/-த்துடன் இன்று 21.06.2022-ந்தேதி திருவள்ளூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு அலுவலகம் வந்து, காவல் ஆய்வாளராகிய தங்களிடம் இப்புகார் மனுவினை கொடுக்கிறேன், மேலும் தாங்கள் எடுக்கும் சட்டப்படியான நடவடிக்கைகளுக்கு நான் முழு ஒத்துழைப்பு கொடுப்பேன் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன். இப்படிக்கு, SdXXX K.விஸ்வநாதன், 21.06.2021,

**Honoured Sir,**

Received the above complaint on 21.06.2022 at 12.30 hrs and after getting proper permission from DVAC on this complaint, enquiry was conducted in a discreet manner. Based on the outcome of the Discreet enquiry, enmity, genuineness of the complaint and the reputation of the accused are verified. Since, there is prima-facie made out to register FIR on said complaint against the accused Tr.Mani, Village Administrative Officer, Krishnamarajakuppam Village, Pallipattu Taluk, Thiruvallur District. Hence, I registered a case in Thiruvallur V&AC, Cr.No.4/AC/2022/TVL u/s. 7 of the Prevention of Corruption Act, 1988 (as amended in 2018) on 21.06.2022 at 14.00 hrs. The original FIR along with complaint sent to the Hon'ble CJM cum Special Judge, Thiruvallur. Copies send to Officers concerned and took-up further action.

G.A.Durai
21/6/2022
(G.ANNADURAI)
**INSPECTOR OF POLICE**
**VIGILANCE & ANTI CORRUPTION**
**Thiruvallur - 602 001.**